DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 140/ 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 8 |
| Name | திரு. முத்து வீரப்பன் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | உதவி ஆய்வாளர் , ஏரல்காவல் நிலையம் |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 15-05-2026.(நேரம்: 04.32PM)**

**முதல்விசாரணை**

1. நான் தற்சமயம் உதவி ஆய்வாளராக ஏரல் காவல் நிலையத்தில் பணியாற்றி வருகிறேன்.

2. நான் இதற்கு முன்பு 11.09.2020 ஆம் தேதி ஆழ்வார்திருநகரி காவல் நிலையத்தில் அலுவலில் இருக்கும்போது நிலைய குற்ற எண் 285/20 பிரிவுகள் 294(பி),427,506(1) இதச மற்றும் 4 of TNPHW Act ஆக SSI குருசாமி அவர்களால் வழக்கு பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவ இடத்திற்கு அன்றைய தினம் 14.00 மணிக்கு சென்று சாட்சிகள் ஸ்டெல்லா மற்றும் வசந்தி ஆகியோர்கள் முன்னிலையில் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு மாதிரி வரைபடம் மற்றும் பார்வைமகஜர் தயார் செய்தேன். **அந்த பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 6,7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** அதன்பின்பு 14.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் உடைந்த

கண்ணாடி ஜன்னல் கதவுகளின் கண்ணாடி துண்டுகளை அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினேன், பின்பு கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **அந்த அத்தாட்சி அசாஆ 8 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. அந்த படிவம் 91 அசாஆ 9 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. வழக்கில் கைப்பற்றிய கண்ணாடி துண்டுகள் சாபொ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

3. பின்பு வழக்கின் சம்மந்தப்பட்ட சாட்சிகள் அலிஸ், ஜெபர்சன், டேவிட் அற்புதராஜ், கண்மணி, ஸ்டெல்லா, வசந்தி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த SSI குருசாமி ஆகியோர்களை விசாரித்து 161(3) சிஆர்பிசி படி வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

4. பின்பு சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் விசாரணையின் அடிப்படையிலும் எதிரிகள் செய்த குற்றம் நிருபணம் ஆனதால் மேற்படி கைது செய்வதற்காக எதிரிகளை தேடி வந்த போது மேற்படி எதிரிகள் மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்ற கிளையில் சிஆர்எல்ஒபிஎம்டி எண் 9983/20 என்ற நடவடிக்கையில் கடந்த 18.09.2020 ஆம் தேதி முன்ஜாமின் உத்தரவு பெற்றுள்ளதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை.

5. இத்துடன் வழக்கின் என்னுடைய புலன் விசாரணையை முடித்து கொண்டு எதிரிகள் மீது உள்ள குற்றம் உண்மை என தெரியவந்ததால் 14.10.2020 ஆம் தேதி எதிரிகள் மீது 294(பி),427,506(1) இதச மற்றும் 4 of TNPHW Act ஆகிய சட்டபிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 04.45PM)**

1.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து ஆழ்வார்திருநகரி கவால் நிலையம் எவ்வளவு தூரம் என்று கேட்டால் 8 கிமீ தூரம் இருக்கும்.

2.மேற்கண்ட 8 கிமீ தூரத்தை இருசக்கர வாகனத்திலோ நான்கு சக்கர வாகனத்தின் மூலம் அடைவதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்று கேட்டால் சுமார் 10 கிமீ ஆகும்.

3.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் இருந்து சுமார் 15 மணி நேரம் கழித்துதான் சம்பவம் பற்றிய விவரங்கள் காவல் நிலையத்திற்கு தெரியவந்தது என்று சொன்னால் சரியல்ல 14 மணிநேரமானது.

4.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு பக்கத்தில் சுமார் 50 வீடுகள் இருக்கும் என்று சொன்னால் சரிதான்.

5. முதல் தகவல் அறிக்கை காலம் எண் 3ல் (b) ல் குறிப்பிட்டுள்ள நேரம், நாள் முன்பு சம்பவம் பற்றிய தகவல் காவல் நிலையத்திற்கு கிடைக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரிதான்.

6.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகிலுள்ள நாராயணன், காமராஜ், ஆகியோர்களை விசாரித்து வழக்கின் சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்றுசொன்னால் சரிதான்.

7. 1முதல் 5 பட்டியல் சாட்சிகள் ஒரே குடும்பத்தை சேர்ந்த குடும்ப உறுப்பினர்கள் என்று சொன்னால் அதுப்பற்றி தெரியாது.

8.நான் இந்த வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்பதால் எனக்கு அதுப்பற்றி தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9. 3 ஆம் நபர் சாட்சிகளை இந்த வழக்கில் விசாரணைசெய்து பட்டியல் சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான்.

10. பொதுவாக கல், கம்பு, கட்டை, சாக்கு, கண்ணாடி போன்ற பொருள்களை இரண்டுக்கும் மேற்பட்ட வகைகளாக பிரிக்கலாம் என்றால் சரிதான்.

11.இந்த வழக்கை பொறுத்தவரை எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் இடையே முன்விரோதம் இருந்ததாக என் விசாரணையில் துலங்கியதா என்று கேட்டால் பேச்சுவார்த்தை மட்டும் கிடையாது.

12. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி ஆள்நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்று சொன்னால் சரியல்ல. குறைவாக தான் உள்ளது.

13.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி என்பது புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் மட்டும் பாத்தியப்பட்ட பகுதி என்றும் அவற்றில் 3 ஆம் நபர்கள் எவருக்கும் பாத்தியம் எதுவும் இல்லை என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

14.இந்த வழக்கில் புகார்தாரர் காவல் நிலையத்தில் ஆஜராகி கைப்பட புகார் எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. தட்டச்சு செய்யப்பட்ட புகாராகும்.

15.தட்டச்சு செய்த நபர்களை இந்த வழக்கில் விசாரணை செய்து அவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

16.இந்த வழக்கில் கல், ஜன்னல், கண்ணாடி போன்றவற்றின் வகைபாடுகளை தெளிவாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

17. நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தி்ல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றுசொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றுசொன்னால் சரியல்ல.

18. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் உண்மைக்கு மாறாக சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

19. என்னுடைய விசாரணையானது ஒருதலை பட்சமானது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.